வந்ததற்குப் பிறகுதான், குழு ஆராய்ந்து முடிவு எடுத்ததற்குப் பிறகுதான், திட்டவட்டமான நிலைமைகள் ஏற்பட்டதற்குப் பிறகுதான் எதையும் செய்யமுடியுமே தவிர அவசரப்பட்டு செய்ய முடியாது. கருத்தளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நடைமுறைப்படுத்துவதற்கு இந்தப் பணிகள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகுதான் முடியும்.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன் வழங்குவதில், முதல் தவணை கேட்டு சென்ற கோரிக்கைதாரார்களுக்கும், மனுதாரர்களுக்கும் கடன் வழங்கியிருக்கிறார்கள். இரண்டாவது தவணை, கடன் வழங்குவதை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். அதனால் குறுவை சாகுபடி செய்வதற்கு, சம்பாவுக்கு உரம் வாங்குவதற்கு எல்லாம் விவசாயிகள் சிரமப்படுகின்றார்கள். இந்த நிலைமைகளைத் தவிர்க்கின்ற வகையில், இரண்டாவது முறையாகக் கொடுக்கும் கடனைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது தவணை கடனைக் கொடுக்காமல் நிறுத்தி வைத்ததற்குக் காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமல், நான் புரிந்துகொள்ளாமல் எந்தப் பதிலையும் இங்கே கூறுவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது நிலைமையைக் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், எவ்வளவு என்று கேட்டறிந்து அதற்கு என்ன பரிகாரம் தேடுவது அல்லது என்ன பதிலைச் சொல்ல முடியும் என்பதைக் கண்டறிந்து சொல்லலாம். பரிகாரம் தேட முடிந்தால் பரிகாரம் செய்ய முடியும் அல்லது பதில் சொல்ல முடியும் என்றால் பதில் சொல்ல முடியும். இரண்டில் ஒன்றை நான் தர முடியும்

விவசாயிகள் சாலைகளைக் களமாக உபயோகித்தல்

34—(* வினா எண் 3747) திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் பகுதியில் விவசாயிகள் சாலைகளைக் களமாக உபயோகிப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

1987 நவம்பர் 11]

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுக்கு மாற்றுவசதி ஏதும் செய்து தரும் திட்டமுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், வேடபாளையம் கிராமத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நெல் கதிரடிக்கும் களங்கள் அமைக்கும் பணி நடப்பாண்டிற்குள் முடிக்கப்படும்.

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஒரு களம் கட்டுவதற்காக அரசு அனுமதி அளித்திருக்கிறது. மேலும் 15 களங்களை அந்தப் பகுதியில் கட்ட அரசு முன்வருமா? ஏனென்றால் அந்தப் பகுதியில் ஏற்கெனவே இருந்த களம் அடிக்கும் நிலங்கள் எல்லாம் இப்போது ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன. ஆகவே அவற்றை அகற்ற வேண்டும். அப்படி அகற்றி 15 இடங்களில் களங்கள் கட்டுவார்களானால் பாதைகளில் நெல்களை அடிப்பதற்கு வாய்ப்பில்லாமல் போக்குவரத்து சீராக இருக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே 15 இடங்களில் களங்கள் கட்டுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சாலைகளிலே இதுபோன்று நெல் போர் அடிக்கின்ற நிகழ்ச்சிகள் தமிழகத்தினுடைய பல மாவட்டங்களிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆகவே ஊராட்சி ஒன்றியத்திலே 10, 15 இடங்களிலே களம் அமைப்பது என்பது நிதிநிலைக்கு உகந்ததாக இல்லை. ஆகவே படிப்படியாகத்தான் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியும்.

பட்டுக்கோட்டை நகரில் பேருந்து நிலையம்.

35—(* வினா எண். 7697) திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரில் கட்டப்பட்டு வரும் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் இரண்டாம் கட்டப் பணி எப்போது துவங்கும்?